## வாழ்வாதாரம் மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு ஆதரவளிப்பதற்கான இணைப்பை முன்னேற்றும் செயற்திட்டம் - 2012

---

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமையினால் திருப்திகரமான அளவீடுகளை எடுத்திருந்தன என்றும்,

(ஊ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 205,098,202 ஆகவும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 359,333,782 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவினத்தின் வகை | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சிவில் வேலைகள் | 85,859,650 | 104,188,900 | 190,048,550 |
| உபகரணங்கள், வன்பொருள் மற்றும் மூலப்பொருட்கள் | 69,236,113 | 24,252,036 | 93,500,497 |
| அதிகரிக்கும் முகாமைத்துவக் கிரயம் | 8,925,776 | 7,886,807 | 22,179,754 |
| பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் பொதுமக்கள் பிரச்சாரம் | 30,030,939 | 9,594,380 | 40,433,109 |
| ஆலோசனைச் சேவைகள் | 7,020,000 | - | 7,020,000 |
| ஏனைய உள்ளீடு | 4,025,724 | 2,126,148 | 6,151,872 |
| | 205,098,202 | 148,048,271 | 359,333,782 |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அக் கணக்கில் இருந்த மீதி என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | யூஎஸ். டொலர் | ரூபா. |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 45,236.94 | 5,152,546 |
| கூட்டு:- மீளளிப்புகள் | 1,421,103.05 | 179,423,956 |
| வெளிநாட்டு நாணய பரிமாற்று இலாபம் | - | 1,030,795 |
| | 1,466,339.99 | 185,607,297 |
| கழி:- பற்றுதல்கள் | 1,465,882.48 | 185,549,120 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 457.51 | 58,177 |
| | ======== | ======== |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைதல்

செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் யூஎஸ் டொலர் 3,429,056 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(I) வீதிகளின் நிர்மாணம்

வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 04 மாவட்டங்களில் 250 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை மீள் நிர்மாணம் செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும்

செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் இறுதியில் 290 கிலோ மீற்றர் கிராமிய வீதிகள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தமை வெளிப்பட்டது.

(II) சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சி

900 சமூக அங்கத்தவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு ரூபா 44,091,600 (யூஎஸ் டொலர் 367,430) தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 152,400 (யூஎஸ் டொலர் 1,270) தொகையான மேலதிக நிதிகள் உள்ளடங்க ரூபா 44,244,000 (யூஎஸ் டொலர் 368,700) தொகையான செலவினத்தில் 2,134 சமூக அங்கத்தவர்கள் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர்.

(III) நலனாளிகளின் பங்களிப்பு

2,340 நலனாளிகளை சிவில் வேலையில் ஈடுபடுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2,918 நலனாளிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களிற்கான படியாக ஒரு வேலை நாளொன்றிற்கு ரூபா 500 படி ரூபா 189,203,950 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மானிய உதவி அறிக்கையில், ஊழியர் பங்களிப்பு பெறுமதி ரூபா 39,486,720 ஆக இனங்காணப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் நலனாளிகளினால் பங்களிக்கப்பட்ட உள்ளவாறான ஊழியக் கிரயம் மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகளின் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளில் அவ்வாறான கணக்காய்வு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(இ) மெதிரிகிரிய மற்றும் கந்தளாய் பிரதேச சபை பிரிவுகளில் கிராமிய வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல்களில் மேற்கொள்ளப்பட்ட

பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(I) மெதிரிகிரிய பிரதேச சபை

(i) ஏழு வீதிகள் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் சகல வீதிகளும் முறையாகப் பராமரிக்கப்பட்டிராததுடன் வடிகால்கள் மண் மற்றும் சேறுகளினால் நிரம்பிக் காணப்பட்டதுடன் வீடுகளிற்கு முன்பக்கம் தவிர வீதியின் இரு பக்கமும் காடு வளர்ந்திருந்தது.

(ii) செயற்திட்டத்தினால் இது வரையிலும் பிரதேச சபையிலிருந்து கருவிகள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொள்ளும் சாத்தியத் தன்மை தொடர்பாக சனசமூக அமைப்புக்களுக்குத் தெரியாமையினால் வீதி மீளமைப்புச் செயற்பாடுகள் பிற்போடப்பட்டிருந்தது. மேலும் வீதி மீளமைப்பு நடவடிக்கைகளுக்காக பொது மக்களுக்கு அறிவூட்டல்களும் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(II) கந்தளாய் பிரதேச சபை

(i) இரண்டு வீதிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் வீடுகளிற்கு முன்னாலுள்ள வீதி மாத்திரம் துப்பரவு செய்யப்பட்டிருந்தது. சில வீடுகளின் முன்னாலுள்ள வடிகால்கள் மண்ணினால் நிரம்பியிருந்தது.

(ii) கந்தளாய் பிரதேச சபைப் பிரிவில் 08 வீதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கருவிகள் 03 வீதிகளை பராமரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அவை பிரதேச சபைக்கு கையளிக்கப்படாது கிராம மக்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது.

| கருவிகள் | விடயங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மண்வெட்டி 9x9 | 24 |
| மண்வெட்டி 8x10 | 19 |
| சவல் | 07 |
| கொங்கிரீட் தாச்சி | 16 |
| வீல் பெரோ | 06 |
| அலவாங்கு | 07 |
| கோடரி | 07 |